நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

மலர் 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 21 திங்கட்கிழமை (07-10-1991) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 307

## படையினரின் கை ஓங்கியுள்ள இவ்வேளையில்

# யுத்த நிறுத்தம் வேண்டாம்; ராணுவம் வலியுறுத்துகிறது

## அரசுக்கு அறிவுறுத்து

கொழும்பு, அக்டோபர் 7

விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் படையினரின் கை ஓங்கியுள்ள இத் தருணத்தில், யுத்தநிறுத்தம் செய்யக் கூடாது என்று இராணுவத் தலைமைப்பீடம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

இராணுவ உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டி நேற்றைய 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

படையினர் தங்கள் நோக்கத்தை அடைவதற்கு நெருங்கிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், இராணுவ நடவடிக்கைகளைத் தொடரும்படி இராணுவத் தலைமைப் பீடம் அரசாங்கத்தைக் கோரியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின.

ஆனையிறவில் இருந்து வவுனியா வரையான பகுதியை விடுவிப்பதற்காக – விடுதலைப் புலிகளுக்கு எதிராக — இன்னொரு இராணுவ நடவடிக்கைக்கு படையினர் தயாராகி வருகின்றனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பழுகாமத்தில் தேடுதல்

யாழ்ப்பாணம், அக்

மட்டக்களப்பு, பெரிய போரதீவுப்படையினரும்சமூக விரோதிகளும் இணைந்து நேற்று முன்தினம் பகல் 2 மணியளவில் பழுகாமம் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

அச்சமயம் 6 தமிழர்கள் அங்கு கைது செய்யப்பட்டனர். தமிழ் மக்களின் உடைமைகளும் அவர்களால் அபகரிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## தப்பி ஓடிய புளொட் சிறி நேற்றுப் பிடிபட்டார்!

யாழ்ப்பாணம், அக். 7

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருந்து தப்பியோடிய புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சிறி என்பவர் (கணேசன் – ஸ்ரீகணேசபுவிதன்) நேற்று அதிகாலை 5 மணியளவில் சுழிபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்துப் பிடிபட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

பொதுமக்களின் உதவியுடன் விடுதலைப் புலிகளால் அந்த வீடு சுற்றிவளைக்கப்பட்டபோது தப்பியோட முற்படுகையில் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டதாகவும், அவரிடம் இருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கொண்டாவில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்தில் நேற்று மாலை விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திரு. அருணன் (குட்) பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரிப் பகுதியில் நேற்று அவ்ரோ கடும் குண்டு வீச்சு!

### ஒருவர் பலி; 6 பேர் காயம்; வீடுகள், கடைகள் சேதம்

—உதயன் பூநகரி செய்தியாளர்: இரா. செல்வராசா—

பூநகரி, அக். 7

பூநகரி, ஆலங்கேணி பகுதிகளில் நேற்று நண்பகல் 12 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று கண்டபடி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியது.

குண்டு வீச்சுக்கு இலக்காகி பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். 6 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். வீடு ஒன்று முற்றாக அழிந்து நாசமானது. இன்னும் சில கடைகள், வீடுகள் என்பன சேதமடைந்தன. பூநகரி, வாடியடிப் பகுதியிலும் கடைகள் மற்றும் கட்டடங்கள் சேதமாகின:

வல்லைவெளிக்குளத்தைச் சேர்ந்த க. செல்வரத்தினம் என்பவரே குண்டு வீச்சில் பலியானவர் ஆவார்.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்த இ. பாலசிங்கம் (தற்போது சதமனையில் தங்கியிருப்பவர் - வயது 38), நா. தனபாலசிங்கம் (வயது 43 - புங்கங்குளம்), எஸ். தியரேசா (வயது 33 - புங்கங்குளம்), பூநகரி ப.நோ.கூ.ச. ஊழியர் மு. இராசதுரை, எஸ். சிவநேசம் (அரியாலை), க. சுப்பிரமணியம் (ஆலங்கேணி) ஆகியோரே காயமடைந்தனர். இவர்கள் பூநகரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். [ஓ-135-5-5]

## டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலம்

கொழும்பு, அக். 7

அம்பாந்தோட்டை கன்னொருவ வீதியில் டயர் போட்டு எரிக்கப்பட்ட ஒருவரின் சடலத்தை பொலீஸார் கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ஆலய ஓடுகள் ஷெல் வீச்சில் சேதம்

சுழிபுரம், அக். 7

பெரண்ணாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவில் தெற்கு வீதியில் நேற்று முன்தினம் (சனி) இரவு ஷெல் விழுந்து வெடித்ததில், ஆலய தெற்கு மண்டபக் கூரை ஓடுகள் சேதமாகின. பக்கத்து வளவில் உள்ள கட்டடம் ஒன்றும் இடிந்து சேதமானது. (ஓ-28)

## ராணுவ நடவடிக்கை கிழக்கில் ஓய்வு

கொழும்பு, அக். 7

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு பகுதியில் மூன்று நாட்களாக இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை கடந்த வெள்ளியுடன் முடிவடைந்ததாக கொழும்பில் கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது எந்த இடத்திலும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது. (உ-எ)

## நாச்சிக்குடாவிலும் தாக்கு

நாச்சிக்குடாப் பகுதியிலும் நேற்று விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அப்பகுதியில் 4 குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் பொதுமக்கள் சிலர் காயமடைந்தனர். வீடு ஒன்றும் சேதமடைந்தது.

முழங்காவிலைச் சேர்ந்த குமாரவேல் நவராஜா (33 வயது), பல்லவராயன்கட்டைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் [31 வயது], மாரிலிங்கம் உட்பட இன்னும் சிலர் காயமடைந்தனர்.

[ஓ-135-5-5]

## வடக்கு கடலில் கடற்படை அதி உயர் உஷார் நிலையில்

### 10நாட்களில் 3முறை புலிகள் தாக்கு

கொழும்பு, அக். 7

வடபகுதிக் கடல் பிரதேசத்தில் அதி உயர் உஷார் நிலையில் இருக்கும்படி கடற்படையினருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங்காட்டி "தி ஐலண்ட்" பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடபகுதிக் கடலில் கடற்படையினரின் நடவடிக்கைகளைச் சீர்குலைக்கக் கூடிய தான தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருவதைத் தொடர்ந்தே இந்த உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அச் செய்தி கூறுகிறது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் 10 நாட்களில் வடக்கு கடல் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் கடற்படையினர் மீது மூன்று தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக் கடலில் கடற்படையினரின் தீவிர ரோந்து நடவடிக்கைக்கு முடிவு கட்டும்படி விடுதலைப் புலிகளுக்கு அவர்களின் தலைமைப் பீடம் உத்தரவிட்டிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

இதேவேளை—

பதில் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜொன்ஸி பெர்னாண்டோ காரைநகர்க் கடற்படைத் தளத்திற்கு கடந்த செவ்வாய் விஜயம் செய்தார். (த-எ)

## நம்பிக்கையில்லா பிரேரணை புதனன்று நாடாளுமன்றில்

கொழும்பு, அக். 7

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை மறுதினம் நாடாளுமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை இன்று காலை பத்து மணியளவில் சபாநாயகர் முஹம்மது சந்திக்கவிருக்கிறார்.

அச்சமயம் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நடைபெறும் திகதி, அதற்கான நேர ஒதுக்கீடு ஆகியனவ பற்றி முடிவு செய்யப்படும் என்று கூறப்பட்டது. (உ-எ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணை: ஈரோஸின் ஆதரவின்றியே அரசு வெற்றி பெறுமாம்!

### அமைச்சர் ரணில் நம்பிக்கை

கொழும்பு, அக். 7

"அரசின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் ஈரோஸின் உதவி இன்றியே நாம் வெற்றி பெறுவோம்."

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து பத்திரிகையாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில், அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் இரகசிய வாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அட... உது வேலியே பயிரை மேஞ்ச [illegible] எல்லே கிடக்கு...!

## லஞ்சத் தடுப்பு பொலீஸார் லஞ்ச வலையில்!

கொழும்பு, அக். 7

கண்டியில் லஞ்சத் தடுப்புப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று பொலீஸார் லஞ்ச வலையில் சிக்கினர்.

கடந்த புதனன்று வர்த்தகர் ஒருவரிடமிருந்து லஞ்சம் பெற முயற்சிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு சிரேஷ்ட நீதிவான் முன்னிலையில் இவர்கள் மூவரும் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை அக்டோபர் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (உ)

## ஐ. நா. மனித உரிமை குழு இன்று கொழும்பு வருகை

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட செயலாற்றுக்குழு ஒன்று இன்று கொழும்புக்கு விஜயம் செய்ய விருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பத்து தினங்கள் நாட்டில் தங்கியிருந்து இங்கு இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து இக்குழுவினர் விசாரணை நடத்துவார்கள்.

பலவந்தமான முறையில் காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து விசாரிப்பதே இக் குழுவின் முக்கிய கடமையாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, கண்டி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் இக்குழுவினர் நேரிற் செல்வர்.

குழுவின் தலைவராக யூகோஸ்லேவியாவைச் சேர்ந்த ஈவான் ரோலிவ்ஸ்கி இருப்பார். பாகிஸ்தானைச் சேர்ந்த ஆகா ஹிலாலி, கென்யாவைச் சேர்ந்த ஜோனால் பொனி ஆகியோரும் இக்குழுவில் அடங்குகின்றனர்

சிரேஷ்ட அரச அதிகாரிகளுடனும் தொண்டர் நிறுவன பிரதிநிதிகளுடனும் இக்குழுவினர் பேச்சுகள் நடத்துவர். (உ-எ)

## ஈ. பி. ஆர். எல். எவ்வினால் எதிரணிக்கு தலைவலி!

கொழும்பு, அக். 7

ஐ. தே. க. அதிருப்தியாளர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் ஈ. பி. ஆர். எல். எவ்வை தம்முடன் கூட்டுச் சேர்த்திருப்பதால் இப்போது பெரும் தலைவலியை எதிர்நோக்கியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆளும் ஐ. தே. க. அரசைத் தோற்கடிப்பதற்காக எதிரணிகள் ஈ. பி. ஆர். எல். எவ்வின் எம். பிக்களையும் தம்முடன் சேர்த்திருக்கின்றனர்.

"விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தியதைக் கண்டிக்கும் எதிரணியினர், சுதந்திர ஈழம் பிரகடனம் செய்த ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் மட்டும் தாங்கள் கூட்டுச் சேர்வதை எப்படி நியாயப்படுத்த முடியும்?" — இவ்வாறு சிங்கள மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய யுக்தி குறித்து இரகசியப் பேச்சுகள்!

கொழும்பு, அக். 7

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போது கடைப்பிடிக்கும் உத்தி குறித்து நாடாளுமன்ற பின்வரிசை எம்.பிக்களுடன் ஐ.தே.க. அதிருப்திக் குழுத் தலைவர்களான திரு. லலித் அத்துலத்முதலியும், திரு. காமினி திஸாநாயக்காவும் இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கமைய ஒற்றுமையாகப் போராடும்படி பின்வரிசை எம்.பிக்கள் பலர் அதிருப்திக் குழுவினரைக் கேட்டிருக்கின்றனர் என்று திரு. காமினி திஸாநாயக்கா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடிமட்டத்தில் இருந்து இப் போராட்டத்தை நடத்தும்படி குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ள பல எம்பிக்கள் தம்மைக் கேட்டுள்ளனர் என்றும் திரு. திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ள 47 ஐ.தே.க. எம்.பிக்களில் இரண்டு பேர் மட்டுமே 'மனம் மாறி' விட்டனர். ஏனைய பேர் குற்றப் பிரேரணைக்குச் சார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் இந்து விற்பனைக்கு உண்டு தொடர்பு: இ. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம். [18328]

### தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள ஒரு தனியார் கல்லூரிக்கு Computer Instructors தேவை. விண்ணப்பிக்கவும். இல. 357, C/O. உதயன். [சி-0623]

### மணமகள் தேவை

டென்மார்க்கில் பணிபுரியும் செவ்வாய்க் குற்றமுள்ள 29 வயதான மணமகனுக்கு டென்மார்க் செல்ல விரும்பும் மணப்பெண் தேவை. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: சண்முகநாதன் 465/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4328)

### ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ் ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும் பியூட்டோ என்ரப்பிறைசஸ் 89/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ-0694]

### செவ்வாய் மாற்றம்

இன்று [7 - 10 - 91] செவ்வாய் மாற்றத்தால் யுத்த நிறுத்தமும், வக்கிரச்சனி பார்வையால் நாட்டில் அரசியல் கொந்தளிப்புகளும் உண்டாகும் செவ்வாய். வியாழ மாற்றங்கள் ரூபா 6/50. எங்கும் விற்பனையாகின்றன. ரகுநாதன் பதிப்பகம், யாழ்ப்பாணம். நூலாசிரியர்: Prof: சத்தியதாஸன். [18324]

### வைத்தியம்

நாள்பட்ட மனநோய், அல்சர், தேகத்தில் எரிவு, பாலுண்ணிகள், வெண்தேமல், போதைவஸ்துக்கு அடிமை, மலட்டுத்தன்மை, மூலம் போன்ற நோய்களுக்கு, ஹோமியோபதி சிகிச்சை நிரந்தர நிவாரணம் அளிக்கின்றது. ஜெயந்திக் கிளினிக், 218/5, பலாலி வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம். [18106]

மசங்கண்மாரி, குட்டநடுங்கல், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவீக்கம், குக்கல்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவர். வேலணை வைத்தியர். சி. இராசரத்தினம், 121 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் [4325]

### யந்திரம்

நவக்கிரக, வைணவ, விவாகத்தடை, தொழில் தடை போன்ற தோஷங்கள் யந்திர மூலம் தீர்த்து வைக்கப்படும் சாதகத்துடன் நேரில் வரவும் ஸ்ரீசக்தி உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி. (ஸ்ரீவீரமாகாளி கோவிலடி) நல்லூர். (18343)

## நிரப்பப்படாத வெற்றிடங்கள்

கொழும்புத்துறை, அக். 7 யாழ் மாவட்டத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளில் முப்பது எழுதுவினைஞர்களுக்கான வெற்றிடங்கள் பல வருடங்களாக நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-80]

---

தமிழீழத்தின் தரமான கலைஞர்களுடன்

மீண்டும்

# ★ ராஜன்ஸ் ★

இசைக் குழுவினர்

புதுமை! இனிமை!! திறமை!!!

[18339]

---

# அருச்சுனா

## தேவை

படங்கள் மீள் படம் எடுக்கவும் [Recopying] படங்கள் பூரணப்படுத்தவும் [Finishing] அனுபவம் உள்ள புகைப்படக் கலைஞர்கள் தேவை. ரூபா இரண்டாயிரத்திற்கு மேல், தகுதிக்கேற்றவாறு மாதாந்த சம்பளம் வழங்கப்படும்.

தி. முருகன்,

**அருச்சுனா** அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம். (18340)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 06 | 22 |
| 08 | 10 |
| 1920 | 1987 |

அமரர்

### க. அரியரட்ணம்

அன்பிற்கும், பண்பிற்கும் உறைவிடமாய் எம் இதயங்களில் அழியாதவராய், உத்தமராய் வாழ்ந்து திடீரென மறைந்தீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு, உரும்பராய். —குடும்பத்தினர். [18311]

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 6 | 07 |
| 04 | 10 |
| 1935 | 1986 |

### அமரர் நாகலிங்கம் பத்மநாதன்

உடற்கல்வி விரிவுரையாளர்

(தலைவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

திதி: 11 — 10 — 1991

பாசமிக்க எமது அன்புத் தந்தையே! இந்நாளில் உங்களை நினைவு கூருகிறோம்.

அன்பான மனைவி, பிள்ளைகள்.

சேகண்டி, வல்வெட்டி (18325)

---

# "A" LEVEL CENTRE

(உயர் தராதரக் கல்வி நிலையம்)

பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

## 93 ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள் ஆரம்பம்

ஆசிரியர்:

| | |
|---|---|
| தாவரவியல் | — Mr. சிவவீரசிங்கம் B.Sc. |
| விலங்கியல் | — Mr. தம்பிராஜா B.Sc. |
| பௌதிகவியல் | — Mr. சௌந்தி B.Sc. |
| தூய/பிரயோக கணிதம் | — Mr. கணேசன் B.Sc. |
| இரசாயனவியல் | — Mr. நாகரட்ணம் B.Sc. |

15 - 10 - 1991 க்கு முன்பதாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும் [சி-0695]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில்: | இறைவன் பாதங்களில்: |
|---|---|
| 05 | 07 |
| 09 | 10 |
| 1968 | 1990 |

பிரான்ஸ் நாட்டில் மரணமடைந்த

அமரர்

### அரிச்சந்திரா சந்திரயோகன்

ஆண்டு பல வாழ்ந்து அரிய சாதனைகள் பல வேண்டியளவும் புரிவாய் என்றிருந்தேன்-என் மகனே வேங்கையாய் நின்ற உன்னை வெல்ல முடியாதென்று அங்கையில் தனியே கவர்ந்தனர் உன் உயிர் காண்
இறந்தும் இறவாது எங்கள் மனங்களில் வாழும் யோகா,
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அரிச்சந்திரா குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். [18345]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 18 07 - 1964



அரக்கரின் பிடியில்: 28 - 09 - 1990

### அமரர் இந்திரசித்து தயாபரன்

தன் உயிரைக் காக்க வென்று
தன் மனைவி, மக்களுடன்
தஞ்சம் அடைந்தாய் பள்ளிவாசல் தனிலே
எம் மண்ணில் காலடி வைத்த கயவர்களின்
கண்ணில் அகப்பட்டு மண்டைதீவு
நோக்கி கொண்டு செல்லப்பட்டாய்
நடந்த கதை அவ்வளவு தான்!
கயவர்கள் உன்னைப்
பெரும் பயணப் பெருவாழ்வில்
பீறு நடைபோட பெரும் கப்பல் ஏற்றி விட்டாரோ!
ஓராண்டு ஓடி மறைந்தாலும் உன் நினைவுகள்
என் நாளும் எமைவிட்டு மாறாது.

பிரிவால் வாடும்: மனைவி, மக்கள்.

மண்கும்பான் மேற்கு, வேலணை [18342]

---

# பிறந்த நாள் வாழ்த்து

புங்குடுதீவு சங்கத்தாசேணி மன்மதராசா தனலெட்சுமி தம்பதிகளின் அருமைப் புதல்வி

## ★ செல்வி அஜந்தா ★

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 7-10-91 தனது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சுவிஸ் மாமா, குட்டி மாமா, அன்ரிமார்கள், மாமி, பெரியப்பா, பெரியம்மா, தம்பி, சுவிஸ் மச்சான், குட்டி மச்சான்மார், மச்சாள்மார்கள், கொழும்பு தாத்தா, அப்பாச்சி ஆகியோர் பல்கலையும் கற்று, முத்துமாரி அருள்பெற்று, பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

3-ம் வட்டாரம், புங்குடுதீவு. [18347]

---

# சிவாஜி

இல. 5, சிவன் வீதி, சாவகச்சேரி.

## 93 A/L

## கலை, வர்த்தக

பாடங்கள் ஆரம்பமாகவுள்ளன.

✶ எமது தனித்துவமான ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. க. கலாகரன் |
| கணக்கியல்: | திரு. S. K. பிரபாகரன் |
| வர்த்தகம்: | திரு. இ. ரகுநாதன் |
| புவியியல்: | திரு. நித்தி |
| இந்து நாகரீகம்: தமிழ்: | கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை |
| அளவையியல்: | திரு. A. பிரபாகரன் |

## 09 10-1991

புதன் மாலை 3-30 மணிக்கு மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்யவும். [சி-0692]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 | 18 |
| 04 | 09 |
| 1934 | 1990 |

அமரர்

### எஸ். கே. செல்லையா

[இளைப்பாறிய நிருவாக உத்தியோகத்தர், உ. அ. அ. பணிமனை, கிளிநொச்சி]

திதி: 07 - 10 - 1991

நெஞ்சார நேசித்து நிதம் வளர்த்தீர்களே
கொஞ்சமல்ல நாம் கொட்டிவிட்ட கண்ணீர்தான்
பாசம் தனைச் சொரிந்து பகலிரவாய் மகிழவைத்தீர்
தேசம் மறந்தோடி எங்கே மறைந்தீரோ!
கண்கள் குளமாக கலங்குகிற நெஞ்சோடு
எண்ணம் எல்லாமே நிறைந்தவரே தேடுகிறோம்
சென்று மறைந்தது ஆண்டு ஒன்று.
நினைப்பில் இருந்து விடுபட முடியவில்லை!
நடக்க முடியாது என்றாலும், எம்மிடையே
வந்துபேச முடியாதோ என்று ஏங்குகிறோம்.

தங்கள் ஆன்மா அமைதி பெற இறைஞ்சும்:

மனைவி - இராசேஸ்வரி,

[மக்கள் - சுதேசன், சுபேந்திரன், சுபானந்தன்.

பண்டித்தறை, தெல்லியடி, சரவெட்டி. [18338]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சுற்றறிக்கை வெறும் புருடாவா?

1956 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியருக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமாகப் பொது நிர்வாக அமைச்சு அண்மையில் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

ஆனால் அந்தச் சுற்றறிக்கை வெறும் கண்துடைப்பாகவே அமைந்திருக்கிறது என்று அதனால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள்.

35 வருடங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் அரச ஊழியர்களில் மிகப் பெரும் எண்ணிக்கையானோர் இப்போது ஓய்வூதியர்களாகவே இருக்கிறார்கள். அவர்களில் பலர் சிங்களம் பயிலமுடியாது என்று எதிர்ப்புத் தெரிவித்தும், அதனைப் பயில விரும்பாமலும், பயில முடியாமலும் 1950 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் ஓய்வு பெற்றவர்கள்.

இவர்களில் மிகப் பலரும் சிங்களச் சட்டம் வருவதற்கு முன்னரே சேவையில் சேர்ந்தவர்கள். அவர்கள் மீது சேவை நிபந்தனைகள், நீதிகளையும் மீறி சிங்களம் திணிக்கப்பட்டதால் அவர்கள் வேறு மார்க்கமின்றி ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

மேலும், பிரஸ்தாப சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் அரச சேவையில் சேர்ந்த தமிழர்களும் மிகப்பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டனர். பலர் சேவையில் இருந்து நீக்கப்பட்டும் உள்ளார்கள். இன்னும் பலருக்கு அவர்களது பதவிக் காலத்தில் மூப்பிலக்கம் இறக்கப்பட்டது. வேறு பல தமிழ் அரச ஊழியருக்கு பதவி உயர்வுகள் மறுக்கப்பட்டன, மற்றும் பலர் பதவியிலிருந்து கீழிறக்கப்பட்டதும் உண்டு.

இத்தகைய பாதிப்புக்களால் தொழிலில் விரக்தி கொண்டு, அதனை உதறித் தள்ளியவர்களும் உள், அவர்களில் பலர் வேறு தொழில் தேடி வெளிநாடுகளுக்கும் சென்று விட்டனர். தொழில் இழந்ததால் மனம் நொந்து, விரக்தி அடைந்து திக்கற்றவர்களாகவும் பலர் மாறினார்.

ஆனால் சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள நிவாரணம் என்ன? பாதிப்படைந்தவர்களை மீண்டும் பதவியில் அமர்த்துவது என்பதாகும்.

மேலே கூறப்பட்ட தரப்பினர்கள் மீண்டும் பதவியில் அமர்ந்து பணி செய்யக்கூடிய உடல், உளச் சுகத்துடன் இருக்கிறார்களா? பாதிக்கப்பட்டவர்கள் எல்லோரையும் மீண்டும் சேர்ப்பது என்பது சாத்தியப்படுமா?

சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அரசாங்கம் இதயசுத்தியுடன் செயற்பட்டால், பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். ஒரு சாராருக்கு மட்டும் நிவாரணம் வழங்கிச் சமாளிக்க முயற்சிப்பது அநீதியானது.

எனவே, மீண்டும் பதவியில் சேர்க்க முடியாதவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டு இறந்து போனவர்களின் உழைப்பில் தங்கியிருந்தவர்களாகக் கருதப்பட்டு ஓய்வூதியம் பெறுவோருக்கும் நஷ்டஈடு வழங்குவது அவசியம்.

சகலருக்கும் நிவாரணம் வழங்க விருப்பமில்லையானால் சுற்றறிக்கை அனுப்பியது வெறும் புருடாவாகவே முடியும்!

---

அரசு - அதிருப்தியாளர் குழு

# சர்வஜன வாக்கெடுப்பு விடயமே பேச்சு தோல்வியுறக் காரணம்

கொழும்பு அக். 7

லலித் — காமினி குழுவினரே மீண்டும் அரசாங்கத்துக்குள் சேர்த்துக் கொள்வதற்காக கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட சமரசப் பேச்சுக்கள் ஐந்து மணி நேரம் நீடித்தன. ஆனால் பயன் எதுவும் ஏற்படவில்லை.

அரசாங்க தரப்பில் பெரும் தோட்ட துணை அமைச்சர் எம். எல். ஏ. அபுசாலியும் அதிருப்தியாளர் குழு தரப்பில் எட்டு எம்.பிக்களும் இந்தப் பேச்சில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு மீண்டும் திரும்புவதா? அல்லது தற்போதைய ஜனாதிபதி ஆட்சி முறையே தொடர்ந்தும் நீடிப்பதா?— என்பதே இப்பேச்சுவார்த்தையின்போது பிரதான விடயமாக இருந்து வந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அதிருப்தியாளர் குழு சார்பில் வற்புறுத்தப்பட்டபோதிலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பின்வரும் ஐந்து அம்ச அடிப்படையில் சமரசப் பேச்சுக்கள் நடைபெற்றன:

★ சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வசதியாக ஒரு திகதியை பிரகடனம் செய்தல்.

★ நாடாளுமன்ற எம்.பிக்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் குறைபாடுகளை அடையாளம் கண்டு நிவர்த்தி செய்ய உயர்மட்டக்குழு ஒன்றை நியமித்தல்.

★ ஜனாதிபதி மீது கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் குற்ற விசாரணை பிரேரணையை திரும்பப் பெறல்.

★ பிரேரணையில் கைச்சாத்திட்டவர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள் என்று உறுதிமொழி அளித்தல்;

★ நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்குதல்.

★ சமரசப் பேச்சுக்கள் பலன் அளிக்கும் அறிகுறிகள் கடந்த புதன்கிழமை வரை தென்பட்டன என்றும்—

வியாழக்கிழமை நடைபெற்ற ஐந்து மணி நேரப் பேச்சுவார்த்தையுடன் இந்த முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன என்றும் துணை அமைச்சர் அபுசாலி தெரிவித்தார். (இ)

---

<!-- box -->

கையெழுத்திட்ட பின்

## எம்.பிக்கள் பின்வாங்குவது அரசியலில் புதிதல்ல!

கொழும்பு, அக். 7

ஆவணம் ஒன்றிலோ அல்லது மகஜர் ஒன்றிலோ எம். பிக்கள் கையெழுத்திடுவதும் பின்பு அதில் இருந்து பின் வாங்குவதும் இலங்கை அரசியலைப் பொறுத்தவரை புதிது அல்ல.

முன்னாள் பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலையின் அந்தரங்கச் செயலாளரான பி. நடேசன் ''கொத்தலாவலை யுகத்தின் உள் கதைகள்'' என்ற தலைப்பில் கொழும்பு சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா காலமானதும் எம். பிக்கள் குழு ஒன்று சேர். ஜோன் கொத்தலாவலையிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தது.

இலங்கையின் அரசியல் உறுதிப்பாட்டைக் குலைக்கும் என்பதால் நீங்கள் பிரதமர் பதவிக்குப் போட்டியிடக் கூடாது என்பதே அந்த வேண்டுகோள் ஆகும்.

சில எம். பிக்கள் கைச்சாத்திட்டு மகஜராகி இந்த வேண்டுகோள் அப்போது சேர். ஜோன் கொத்தலாவலையிடம் கையளிக்கப்பட்டது.

மகஜரில் கையெழுத்திட்ட எம். பிக்களில் ஒருவர் அன்று மாலையே சேர். ஜோன் கொத்தலாவலையிடம் ஓடி வந்தார்.

டி. எஸ் சேனநாயக்காவின் பூதவுடலுக்கு வைப்பதற்கான மலர் வளையம் ஒன்றை வாங்குவதற்குப்பணம் திரட்டுவதற்கான பட்டியல் என்று கூறியே அதில் கையெழுத்திட்டதாகவும் அதை வாபஸ் பெறுவதாகவும் அவர் சேர். ஜோன் கொத்தலாவலையிடம் கேட்டுக்கொண்டாராம்.

இப்படி நடேசன் கூறினார்.

---

## கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் மூன்றாம் வகுப்பு (III) தரத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு திறமை, சேவை மூப்பு அடிப்படையில் தகுதியுடையவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான அறிவித்தல் அரசாங்கசேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவால் கடந்த நவம்பர் 27 ஆம் திகதியே அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கல்விச் சேவைக் குழுவிற்கு கிடைக்கக் கூடியதாக தமக்குரிய கோட்ட அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களும், முதலாந்தர அதிபர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு குறைந்த பட்சம் மூன்று வருட சேவையை பூர்த்தி செய்தவர்களும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

(இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் பிரதி, பொதுச்சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு உறுப்பினர் திரு. ஜெயகுமாரனால் உதயன் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிவித்தலை உதயன் பணிமனையில் பார்வையிடலாம்.)

(உ-ஓ)

---

## நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாதோர் நாடாளுமன்றத்துக்கு வருவது ஏன்?

### காமினி திஸநாயக்கா கேள்வி

கொழும்பு, அக். 7

''நாடாளுமன்ற ஜனநாயகத்தில் விடுதலைப் புலிகளுக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவானதொன்று.

சகல பிரச்சினைகளுக்கும் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தீர்வு காண வேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும். அப்படிப்பட்டவர்கள் ஏன் நாடாளுமன்றத்துக்கு எம். பிக்களை அனுப்ப வேண்டும்?''

—இப்படிக் கேள்வி எழுப்பினார் முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கா. பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''விடுதலைப் புலிகளுடன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் வைத்து ஒன்றரை வருடங்களாக அரசாங்கம் பேச்சு நடத்தியது.

அக்காலத்தில் விடுதலைப் புலிகளின் நோக்கத்தை அரசாங்கத்தினால் அறிந்து கொள்ள முடியாமற் போய் விட்டதா?

அதேவேளை அரசாங்கத்தின் நோக்கத்தையும் விடுதலைப் புலிகளினால் அறிந்து கொள்ள முடியாமற் போய் விட்டதா?

இப்போது எதற்காக நாடாளுமன்றத்திலுள்ள காலியான எம். பி. பதவிகளை நிரப்புவதில் விடுதலைப் புலிகள் தீவிரம் காட்டுகின்றனர்?

இதற்கான பதில் தெளிவானதாகும்.

ஈரோஸ் விடுதலைப் புலிகளின் வார்த்தைகளால் தன்னை காப்பாற்றிக் கொள்ளலாம் என்று அரசு நம்புகிறது''—

இப்படி [illegible] விக்கப்பட்டுள்ளது. (த-எ)

---

## நவராத்திரி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 7

சக்திக்கு விழா எடுத்துத் துதிக்கும் நவராத்திரி விரதம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

குடாநாடு எங்கும், பிரதானமாக அம்பாள் ஆலயங்களிலும், ஏனைய ஆலயங்களிலும் இல்லங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றிலும் நவராத்திரி விரதம் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கப்படும்.

இம்மாதம் 17ஆம் திகதி வியாழக்கிழமை விஜயதசமியுடன் நவராத்திரி விழா முடிவுறும். அன்று காலை பிள்ளைகளுக்கு வித்தியாரம்பமும், மாலையில் ஆலயங்களில் மானம்பூ வைபவமும் இடம்பெறும்.

பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்வதற்குத் தேவையான அரிச்சுவடிகளை இவர் தர்ம வள்ளல் கலாநிதி க. கனகராசா தேவைப்படும் பாடசாலைகளுக்கும், சனசமூக நிலையங்களுக்கும் இலவசமாக விநியோகித்து வருகிறார். (அ-28)

---

காமினிக்கு எதிரான வழக்கில்

## பேராசிரியர் புல்ஜென்ஸை கைது செய்ய பிடியாணை!

பேராசிரியர் ரால்ப்புல்ஜென்ஸை கடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்காவுக்கும் மற்றும் மூவருக்கும் எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கு கடந்த செவ்வாயன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். கடவத்த ஆராச்சி முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அச் சமயம் வழக்கின் முதல் சாட்சியும், முறைப்பாட்டாளருமான பேராசிரியர் புல்ஜென்ஸ் நீதிமன்றில் ஆஜராகவில்லை. அமெரிக்காவில் தற்சமயம் தங்கியிருப்பதாகக் கூறப்படும் அவரைக் கைது செய்வதற்கு நீதிபதி பிடியாணை உத்தரவு பிறப்பித்தார்.

அவர் கைதாகும் பட்சத்தில் அவரை ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடவும் நீதிபதி அனுமதியளித்தார்.

வழக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

1988 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் திகதி கொழும்பு ஸ்டெல்டன் வீதியில் வைத்து பேராசிரியர் புல்ஜென்ஸைக் கடத்தியதாக காமினி திஸாநாயக்கா உட்பட நால்வர் மீது இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-த)

---

சார்க் மாநாட்டுக்கு

## இரவல் ஹெலிகளுடன் 'பைலட்டு'களும் வருவர்

கொழும்பு. அக். 7

சார்க் உச்சி மாநாட்டுக்காக இலங்கை இரவல் வாங்கும் ஹெலிக்கொப்டர்களை அவற்றை அனுப்பி வைக்கும் நாடுகளைச் சேர்ந்த விமான ஓட்டிகளே [பைலட்டுகளே] செலுத்துவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா மூன்று ஹெலிக்கொப்டர்களையும் பாகிஸ்தான் மூன்று ஹெலிக்கொப்டர்களையும் இரவலாக வழங்க முன்வந்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

---

சார்க் உச்சி மாநாடு:

## 5 ஆயிரம் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில்!

கொழும்பு, அக். 7

எதிர்வரும் நவம்பரில் கொழும்பில் நடைபெற உள்ள சார்க் உச்சி மாநாட்டிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க 5 ஆயிரம் பொலீஸார் ஈடுபடுத்தப்படுவர்.

பயிற்றப்பட்ட மோப்ப நாய்கள் அடங்கிய ஓர் அணி, வெடிகுண்டுகளைக் கண்டு பிடிக்கும் சாதனங்கள், ராடர் மற்றும் நவீன உபகரணங்களும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் என்றும் உச்சி மாநாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

குழப்ப நிலைமையை எதிர்பார்த்து இராணுவமும் உஷார் நிலையில் வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் படையினர் இதற்காக அழைக்கப்பட மாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

ஆனால் தலைவர்கள் தங்கள் சொந்தப் பாதுகாப்பிற்கு சொந்த பாதுகாப்புப் படையினரைக் கொண்டு வரலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## உப்பு நிறுவனத்தில் ஊழியர் நிதியம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், அக். 7

தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த சகல ஊழியர்களினதும், ஊழியர் நம்பிக்கை நிதியத் தொகை மீளளிக்கப்படவுள்ளது.

ஊழியர்கள் சார்பில் 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் 1990 டிசம்பர் வரை செலுத்தப்பட்ட தொகையை பெறுவதற்கான படிவங்களை ''லங்கா சோல்ட்'' நிறுவனத்தின் வடபிராந்திய முகாமையாளர் இப்போது விநியோகித்து வருகிறார்.

ஆனையிறவு உப்பளம் மூடப்பட்டிருப்பதால், ஊழியர்களின் வசதி கருதி மூரக மோட்டையில் நவஜீவனத்துக்கு அருகாமையிலும், பளை மகாவித்தியாலயத்திலும், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் முறையே பத்தாம், பன்னிரண்டாம், பதின்மூன்றாம் திகதிகளில் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்று பிராந்திய முகாமையாளர் திரு செ. வேலாயுதபிள்ளை அறிவித்திருக்கிறார். [அ 3]

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், அக். 7

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரி அம்பாள் கோவிலில் அஷ்டோத்திர சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும். (த(

## ராஜீவ் கொலை: விசாரணை இன்று ஆரம்பம்

புதுடில்லி, அக். 7

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்டுள்ள நீதியரசர் வர்மா தலைமையிலான ஆணைக்குழு தனது விசாரணையை முதற்தடவையாக இன்று புதுடில்லியில் ஆரம்பிக்கிறது.

ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பில் குறைபாடுகள் இருந்தனவா என்பதைப்பற்றி ஆராய இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. (ஒ-எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், அக். 7

யாழ். அரச அதிபர் அலுவலகத்தில் நாளைகாலை 9-30 மணியளவில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் சகல கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கொத்தணி அதிபர்களும், தேசிய, தனியார் கல்லூரி அதிபர்களும் கலந்துகொள்ளும்படி கல்விப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாடசாலை மாணவர் உணவு முத்திரை சம்பந்தமாகவே கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தி என அழையாதீர் என்கிறார் ஜெயலலிதா

சென்னை, அக். 7

தம்மை ''பராசக்தி'' என்று அழைக்க வேண்டாம் என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமது கட்சி உறுப்பினர்களுக்கு கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளார். சட்டசபை விவாதத்தின் போது அவர் இக் கண்டனத்தைத் தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் சட்டசபையில் நடைபெறும் விவாதங்களில் அ.இ.மு.க. உறுப்பினர்கள் செல்வி ஜெயலலிதாவை ''பராசக்தி'' என்றும் ''காவல் தேவதை'' என்றும் விளித்துப் பேசுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)


Personal

New Science Centre

Elilakam Front Lane,
JAFFNA.

**93 A/L**

★ கணித, உயிரியல் விஞ்ஞானப் பிரிவு ★

ஆரம்பம்:
16—10—1991
4 p.m.

★ நேர அட்டவணையை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

[சி-0624]


## ஈ. பி. ஆர். எல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மத்தியில் அரச தரப்பினர் கேள்வி எழுப்பி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கேள்வி எதிரணியினரை சிக்கலில் மாட்டிநிற்பதாகவும் கூறப்படுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ் தலைமையிலான வடக்கு - கிழக்கு மாகாணசபை 1990 மார்ச் முதலாம் திகதி ஒரு தலைப்பட்சமாக சுதந்திர ஈழப் பிரகடனம் செய்தபோது, அப்போதைய அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், எதிர்க்கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அதனை வன்மையாகக் கண்டித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)


இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை.

திட்டமிடல் இணைப்பாளர்.

தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் பதவிகள்

திட்டமிடல் இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 12 - 10 - 1991 க்கு முன் விண்ணப்பிக்கவும். நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படுவோர் பெயர்ப் பட்டியல் பணிமனையில் 14 - 10 - 1991 இல் வெளியிடப்படும். நேர்முகப் பரீட்சை 15 - 10 - 1991 முற்பகல் 10 மணிக்கு இப் பணிமனையில் நடைபெறும். (தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்படமாட்டா.)

தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களுக்கான செய்முறைப் பரீட்சை 12 - 10 - 1991 பிற்பகல் 1 மணிக்கு இப் பணிமனையில் நடைபெறும். (தமது தட்டச்சு இயந்திரங்களைக் கொண்டுவரவும்)

78, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

[C/0627]



கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம்

G. C. E. A/L 93 பிரிவு I

| | | |
|---|---|---|
| தமிழ் | - திரு. குழந்தை | 7-8 |
| இந்துநாகரீகம் | - திரு. ஜோதீஸ்வரன் | 8-9 |
| பொருளியல் | - திரு. உதயன் | 9-10 |
| கணக்கியல் | - திரு. ஸ்ரீ | 10-11 |
| வர்த்தகம் | - திரு. இரட்ணம் | 11-12 |
| அளவையியல் | - திரு. சயந்தன் | 12-1 |
| புவியியல் | - திரு. வேலாயுதம் | 1-2 |
| அரசியல் | - திரு. குமார் | 2-3 |

ஆரம்பம்: 19—10—91
காலை 7-00 மணி

குறிப்பு: வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவதால் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

(சி/0629)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

'கலதாரி மெரிடியன்' ஹோட்டலில் தங்கி உள்ள

# புலிகள் பிரமுகர் ஒருவருக்கு 24 மணி நேர பாதுகாப்பு

## லலித் குற்றஞ்சாட்டுகிறார்

கொழும்பு, அக். 7

1987 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி தொலைக்காட்சியில் இனப்பிரச்சினை தொடர்பாக, பகிரங்கமாக விவாதம் செய்த புலிகள் இயக்க லண்டன் இணைத் தலைவர் சிவகுமாரன் சத்தியமூர்த்தி தற்போது கொழும்பில் கலதாரி மெரிடியன் ஹோட்டலில் தங்கி உள்ளார். அவருக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது.

அதிருப்தியாளர் குழுவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி கடந்த 2 ஆம் திகதி தமது இல்லத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு கூறினார்.

லலித் அத்துலத் முதலி மேலும் கூறியதாவது:-

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகள் இயக்க பிரமுகர்களை விடுதலை செய்வது தொடர்பாக சத்தியமூர்த்தி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். மருதானை குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட மனோகரி டானியல் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு விட்டார்.

புலிகள் இயக்கம் தனது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும். ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அவர்கள் நாடாளுமன்றம் வந்தால் நாம் வரவேற்போம்.

ஆயுதப் போராட்டத்தைக் கைவிடாது புலிகள் நாடாளுமன்றம் வந்தால் கொழும்பு நகருக்கு பெரும் அனர்த்தம் ஏற்படும் என அஞ்சுகிறேன். இது தொடர்பான அறிக்கைகள் உளவுப் பிரிவுக்கு கிடைத்துள்ளன.

நாம் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதால் சுதந்திரமாக பொதுக் கூட்டங்களை நடத்தக்கூடியதாக இருக்கிறது. கட்சிக் கொள்கைகளுக்கு அமைய நாம் நடக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு எமக்கு இல்லை.

அரசாங்கத்தின் மீது சுதந்திரக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக நாம் வாக்களிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானித்துள்ளோம். ஆனால் அதனை இப்போது வெளியிட விரும்பவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ)

## யுத்த..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளும் இதனை எதிர்பார்த்து தம்மைத் தயார் செய்து வருவதாக கொழும்புக்குக் கிடைக்கும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

புதிய இராணுவ நடவடிக்கையின்போது, முல்லைத்தீவு 'மின்னல் தாக்குதலில்' பயன்படுத்தப்பட்ட படையினருக்குப் பதிலாகப் புதிய படையினர் பயன்படுத்தப்படுவர் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின. [உ-எ]

## புதிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமாகவே உள்ளனர் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு எப்படி நடத்தப்படவேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் — ''வழமைக்கு மாறான நடவடிக்கை ஒன்றை அதிருப்தியாளர்கள் எடுப்பர்'' என்று திரு. காமினி திஸநாயக்கா கூறினார். [அ-எ]

## தப்பி ஓடிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சமூகவிரோத சக்திகள் தமிழீழத்துக்குள் ஊடுருவல் செய்வதையோ, செயற்படுவதையோ மக்கள் அனுமதிக்கவில்லை என்பதை மூன்றாவது தடவையாக புளொட் சிறி கைது செய்யப்பட்ட சம்பவம் உணர்த்துகிறது.

ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்ட இடமொன்றைக் காட்டுவதாக கூறியதை அடுத்து, கடந்த முதலாம் திகதி அவரை அழைத்துச் சென்றபோது அவர் எம்மிடமிருந்து தப்பி ஓடி விட்டார்.

பின்னர் அவரது நடமாட்டம் குறித்த பல தகவல்களும் மக்கள் மூலமாக எமக்குக் கிடைத்து வந்தன.

இந்திய இராணுவம் எமது மண்ணில் இருந்த காலகட்டத்தில் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட உதவிப் பொறுப்பாளராக இருந்தவர் இவர்.

அந்தக் காலப் பகுதியில் புலிகள் ஆதரவாளர்களையும், போராளிகளையும் இந்திய இராணுவத்துடன் இணைந்து தீர்த்துக் கட்டுவதில் முன்நின்று செயற்பட்டவர்.

உரும்பராய் பாக்கியக்கா என்ற பெண்ணின் கொலை, சீமாட்டி புடைவை மாளிகை கொள்ளை உட்பட பல கொலைகளையும் கொள்ளைகளையும் புரிந்தவர்.

1985 ஆம் ஆண்டு சுழிபுரம் பகுதியில் புலிகள் போராளிகள் படுகொலை செய்து புதைக்கப்பட்ட சம்பவத்துடனும் தொடர்புடையவர்.

யாழ். மணியம் தோட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், இந்திய இராணுவம் இங்கிருந்து வெளியேறிய பின்னர் புளொட்டின் உளவாளியாக தமிழீழத்தில் செயற்பட்டு வந்தார்.

வடக்கிற்கு வெளியே செல்வதற்காக பிரயாண அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்ததையடுத்து எமது கண்காணிப்புக்கு ஆளாகி வந்த இவர், கடந்த எட்டு மாதங்களுக்கு முன்னர் உடுவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

சாதாரண நிலையில் எம்மால் சிறை வைக்கப்பட்டிருந்த சமயம் ஏற்கனவே ஒரு தடவை எம்மிடமிருந்து தப்பிச்சென்று, கைதானவர்.

எமக்கு ஆதரவாக விழிப்புணர்வுடன் செயற்பட்டு இவரைக் கைது செய்ய ஒத்துழைத்த எமது மக்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு திரு. அருணன் தெரிவித்தார். (ஒ-ஏ)

## ஈரோஸின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கெடுப்பு நடத்த தேவை இல்லை என்றும், சபையின் நிலையியற் கட்டளை இதில் தெளிவாக உள்ளது என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் சொன்னார்.

'விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் குறித்து எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தில் அடுத்தவாரம் கேள்வி எழுப்பும்போது உண்மை நிலையைத் தெளிவுபடுத்துவோம்.' — என்றார் அவர்.

'நாடாளுமன்றத்துக்கு வரும் ஈரோஸ் உறுப்பினர்கள் தமக்கு பாதுகாப்பு வழங்கும்படி அரசைக் கேட்டுள்ளார்களா?' என்று அமைச்சரிடம் கேட்டபோது அவர் 'ஆம்' என்று பதிலளித்தார்.

இதற்கிடையில்—

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பதில் அரசு ஈரோஸ் இயக்கத்தையோ அல்லது வெளியிலிருக்கும் வேறு அமைப்புகளின் ஆதரவையோ நாடவில்லை என்று அமைச்சரும், ஐ. தே. கட்சியின் செயலாளருமான சிறிசேன கூரே தெரிவித்தார். (இ-க)

## கோவையில் ஒருவர் கைது

சென்னை, அக். 7

விடுதலைப் புலிகளுக்கு கைக்குண்டுகளைத் தயாரிக்க உதவி புரிந்தார் என்ற சந்தேகத்தில் ரவி என்ற இளைஞரைக் கோவைக்கு அருகே உள்ள துடியலூரில் கடந்த வியாழக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

ராஜீவ் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள விக்னேஸ் என்ற விக்கியின் நெருங்கிய சகா என்று சென்னைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

25 வெடி மருந்து குச்சிகளையும், 25 மின்சார வெடிக்க வைக்கும் கருவிகளையும், மேலும் கைக் குண்டுகளைத் தயாரிப்பதற்கான பாகங்கள் சிலவற்றையும் பொலிஸார் இவரிடமிருந்து கைப்பற்றினராம். (த)

## சீனாவில் 46 பேருக்கு மரண தண்டனை

புதுடில்லி, அக். 7

சீனாவில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக 46 குற்றவாளிகளுக்கு கடந்த வாரம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தென் மேற்கு மாகாணமான யுநாமில் மட்டும் கொலை, கொள்ளை, கற்பழிப்புக் குற்றங்களில் ஈடுபட்டமைக்காக 26 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (உ)

## நடமாடும் செயலகம்

வடமராட்சி, அக். 7

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம்மாதம் 10 ஆம் திகதி நடமாடும் செயலகம் இயங்கவுள்ளது. [இ-165]

## பத்துப் பேர் உயிருடன் எரிப்பு

பெங்களூர், அக். 7

கர்நாடக மாநிலம், பீஜப்பூர் மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் நேற்று முன்தினம் குடும்பச் சண்டை காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர்.

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கயிலாயபிள்ளை

சரவணை கிழக்கு, 9 ஆம் வட்டாரம் வேலணையைச் சேர்ந்த ஆறுமுகம் கயிலாயபிள்ளை 6-10-1991 அன்று காலமானார். அன்னார் வேலணையைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகனும், பூலோகநாயகியின் அன்புக் கணவரும், தேவேந்திரன் (முன்னை நாள் வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியரும், தற்போது வேலணை சைவப் பிரகாச வித்தியாலய ஆசிரியரும்) அவர்களின் அன்புத் தந்தையும், துரையப்பா, சின்னத்துரை, குமாரு, செல்லையா, பாக்கியம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜிதா, தர்சன், சுதர்சன் ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 82, ஸ்ரான்லி வீதி இல்லத்தில் இன்று [7-10-1991] காலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
க. தேவேந்திரன்.

21, இவன் பண்ணை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். [18346]

## திரு. கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்

(வட்டுக்கச்சி தங்கம் அரிசி ஆலை, சுந்தரம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. க. சோமசுந்தரம் அவர்கள் வியாழக்கிழமை (3 - 10 - 91) காலை காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (7 - 10 - 91) மாலை 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

83/16, அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (18110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org